

கவிதை : இலக்கிலாது சஞ்சரித்தேன் நான் **I wandered Lonely as a cloud – William Wordsworth)**

Written by - ஆங்கிலக் கவி வில்லியம் வொர்ட்ஸ்வொர்த் | தமிழ் மொழியாக்கம் : முனைவர் ஆர். தாரணி -
Saturday, 16 September 2017 14:42 - Last Updated Saturday, 16 September 2017 15:09

the
Daffodils
William Wordsworth

இலக்கிலாது சஞ்சரித்தேன் நான்
பள்ளத்தாக்கின் மீதும், மலை மீதும், உயர மிதக்கும்
ஒரு வான் முகில் போல்,
கண்டேன் நான் அவ்வமயம்
ஒருமருங்கே அனைத்தையும்
ஒரு பெருந்திரள் கூட்டமாய் பொன் வண்ண எழிலில் டாப்போடில்ஸ் மலர்கள்
ஏரியின் அருகாமையில், மரங்களின் கீழ் நிழலில்
மென்காற்று அலையில்
சிலிர்த்துப் படபடத்துக்கொண்டும், நர்த்தனமாடிக்கொண்டும் அவைகள்.

தொடர்ச்சியாக ஒளிரும் விண்மீன்கள்
பால் வெளி மண்டலத்தின் மேலே கண் சிமிட்டுவது போன்றே
விரிகுடா விளிம்புடன் இணைந்து
முடிவுறா நீண்ட கோடுகளில் அவை பரந்து படர்ந்திருந்தன
கண்டேன் நான் பத்தாயிரம் மலர்க்கூட்டத்தை ஒரு கணப்பொழுதில்
தலையை அசைத்து ஆனந்த நர்த்தனமிடும் அவைகளை.

எழும்பும் அலைகளும் அவற்றின் அருகே கூத்திட்டன; எனினும்
மினுமினுத்த ஏரி அலைகளை அவைகள் குதூகலத்துடன் தோற்கடித்தன.
ஒரு கவிஞனுக்கு மனமகிழ்வை வழங்கும் இத்துணையின்
உல்லாசம் தவிர வேறு ஏதிலும் அடைய வாய்ப்பு இலாது:
கூர்நோக்குடன் கவனித்தேன் நான் - மென்மேலும் கூர்ந்து நோக்கினேன் - ஆயினும்
அக்காட்சி அவ்வமயம் எனக்களித்த

1 / 3

கவிதை : இலக்கிலாது சஞ்சரித்தேன் நான் **I wandered Lonely as a cloud – William Wordsworth)**

Written by - ஆங்கிலக்கவி வில்லியம் வொர்ட்ஸ்வொர்த் | தமிழ் மொழியாக்கம் : முனைவர் ஆர். தாரணி -
Saturday, 16 September 2017 14:42 - Last Updated Saturday, 16 September 2017 15:09

செல்வவளம் பற்றி சொற்ப சிந்தனையே இருந்தது.

எனினும் பின்னாட்களில் அநேகமுறை
என் மஞ்சமதில் மனம் கிறங்கி
சூனியமான நினைவுகளிலோ, ஆழ்ந்த விசாரத்திலோ
மூழ்கிக் கிடக்கும் வேளைதனில்
அந்தராத்மாவின் நேத்திரத்தில் அம்மலர்களின்
மின்னல் போன்ற திடீர் ஒளித்தெறிப்பு நேர்வது
புளகாங்கிதம் அளிக்க வல்ல ஏகாந்த இன்பமாகும்
ஆதலினால், இதயப்பரப்பின் இரகசிய திசுக்களில்
இன்பநுகர்வு இயைந்து வழிந்து
டாப்போடில்ஸ் மலர்கள் உடனான களிநடனக்கூத்தாட்டமிடுகிறது

The Daffodils By William Wordsworth, 1770 - 1850

I wandered lonely as a cloud
 That floats on high o’er vales and hills,
When all at once I saw a crowd,
 A host, of golden daffodils;
Beside the lake, beneath the trees,
Fluttering and dancing in the breeze.

Continuous as the stars that shine
 And twinkle on the Milky Way,
They stretched in never-ending line
 Along the margin of a bay:
Ten thousand saw I at a glance,
Tossing their heads in sprightly dance.

The waves beside them danced, but they
 Out-did the sparkling waves in glee:
A Poet could not but be gay,
 In such a jocund company:
I gazed—and gazed—but little thought
What wealth the show to me had brought:

For oft, when on my couch I lie
 In vacant or in pensive mood,
They flash upon that inward eye
 Which is the bliss of solitude;
And then my heart with pleasure fills,
And dances with the daffodils.

2 / 3

கவிதை : இலக்கிலாது சஞ்சரித்தேன் நான் **I wandered Lonely as a cloud – William Wordsworth)**

Written by - ஆங்கிலக் கவி வில்லியம் வொர்ட்ஸ்வொர்த் | தமிழ் மொழியாக்கம் : முனைவர் ஆர். தாரணி - Saturday, 16 September 2017 14:42 - Last Updated Saturday, 16 September 2017 15:09

- முனைவர் ஆர். தாரணி -

akilmohanrs@yahoo.co.in

- மூலம்: ஆங்கிலக் கவி வில்லியம் வொர்ட்ஸ்வொர்த் | தமிழ் மொழியாக்கம் : முனைவர் ஆர். தாரணி -

3 / 3